இவர்கள் முழுமையாக பெற்றுள்ளனர். பணியில் சேர்ந்த நாள் முதல் நாளது வரை இவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே, மேற்குறிப்பிடப்பட்ட விவரங்களின் அடிப்படையில் பின்வரும் அட்டவணையில் கலம் எண். 2-இல் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர்களின் பொருட்டு, கலம் எண்.4-இல் குறிப்பிடப்பட்டுள்ள நாள் முதல் தட்டச்சர் நிலையில் அவர்களது பணியை வரன்முறை செய்து இதன்வழி உத்தரவிடப்படுகிறது.

| வ. எண் | பணியாளரின் பெயர் தற்பொழுது பணிபுரியும் பதவி / அலுவலகம் (திருவாளர்கள்) | முதன் முதலில் பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | பா.சரவணன், தட்டச்சர், உதவி இயக்குநர்(ஊ&த) அலுவலகம், பெரம்பலூர். | 01.10.2014 முப. | 01.10.2014 முப. |
| 2 | நா.செல்வி தட்டச்சர், ஊராட்சி ஒன்றியம், வேப்பூர். | 21.08.2014 முப. | 21.08.2014 முப. |
| 3 | மு.சத்தீஸ்வரி, தட்டச்சர், ஊராட்சி ஒன்றியம், வேப்பந்தட்டை | 25.08.2014 முப. | 25.08.2014 முப. |
| 4 | அ.விமலாதேவி, தட்டச்சர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, பெரம்பலூர். | 27.08.2014 முப. | 27.08.2014 முப.. |
| 5. | பி.ரேவதி, தட்டச்சர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, பெரம்பலூர். | 25.08.2014 முப. | 25.08.2014 முப.. |
| 6. | ஷ.ஹபிபுனிஷா, தட்டச்சர், ஊராட்சி ஒன்றியம், பெரம்பலூர். | 13.10.2014 முப. | 13.10.2014 முப. |

(ஒப்பம்) 19/6/15
மாவட்ட ஆட்சியரின் நேர்முக
உதவியாளர்(வளர்ச்சி), பெரம்பலூர்.

பெறுதல்

தொடர்புடைய நபர்கள் - உரிய வழியாக.

நகல்: திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, பெரம்பலூர்.
நகல்: உதவி இயக்குநர் (ஊராட்சிகள் மற்றும் தணிக்கை), பெரம்பலூர்.
நகல்: வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (வஊ/ கிஊ), பெரம்பலூர்/வேப்பந்தட்டை/வேப்பூர்.
நகல்: பஅ2 - இருப்பு கோப்பிற்கு.

பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர்முக உதவியாளரின் (வளர்ச்சி) செயல்முறைகள்
முன்னிலை: திரு.ந.கோபு, எம்.ஏ.,

ந.க.எண்.4072/2014/பஅ2 நாள்: 12.06.2015

பொருள்: பணியமைப்பு - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - பெரம்பலூர் மாவட்டம் - 2013-2014-ஆம் ஆண்டு- தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் - தொகுதி –IV-இல் உள்ளடங்கிய தட்டச்சர் பணியிடங்கள் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் போட்டித் தேர்வு நடத்தப்பெற்று தேர்வு செய்யப்பட்ட நபர்களின் பெயர்கள் கொண்ட பட்டியல் வரப்பெற்றது – பணிநியமனம் செய்யப்பட்டு பணியில் சேர்ந்துள்ளனர் - பணியில் சேர்ந்த நாள் முதல் பணியை வரன்முறை செய்து உத்தரவிடுதல்.

பார்வை:
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-ன் கடித எண்.5850/ PSD-F/2014, நாள்: 07.08.2014
2. பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறைகள் ந.க.எண்.4072/2014-1,2,3,4,5,6/பஅ2, நாள்: 18.08.2014
3. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-ன் கடித எண்.5850/ PSD-F/2014, நாள்: 22.09.2014
4. பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் செயல்முறைகள் ந.க.எண்.4072/2014/பஅ2, நாள்: 07.10.2014

------

உத்தரவு:

பெரம்பலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் தட்டச்சர் நிலையில் 2013-2014-ஆம் ஆண்டில் தோன்றிய காலிப்பணியிடங்களில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் தொகுதி-IV-இல் உள்ளடங்கிய தட்டச்சர் பதவிக்கு 2013-2014-ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் போட்டித் தேர்வு நடத்தப்பெற்று தேர்வு செய்யப்பட்டவர்களுள், பெரம்பலூர் மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நபர்களின் பெயர்கள் கொண்ட பட்டியல், பணி நியமனத்தின் பொருட்டு, பார்வை 1,3-இல் காணும் கடிதங்களின்வழி இவ்வலுவலகத்திற்கு வரப்பெற்றது. இவர்களை பணி நியமனம் செய்து பார்வை 2,4-இல் காணும் செயல்முறைகளின்படி உத்தரவிடப்பட்டது. இவர்கள் அனைவரும் பணியில் சேர்ந்துள்ளனர்.

இந்நிலையில், தட்டச்சர் நிலையில் முறையாக பணியில் சேர்ந்த நாள் முதல் இவர்களின் பணியை வரன்முறை செய்திட பரிசீலித்திடும் பொருட்டு, தொடர்புடைய அலுவலகத் தலைவர்களிடமிருந்து கருத்துருக்களை பெற்று கவனமாக பரிசீலிக்கப்பட்டது. தட்டச்சர் பணி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட தகுதிகளை